செய்தி வெளியீடு எண்: 969        நாள்: 8.11.2008

**வீர. இளவரசன் மறைவு குறித்து**
**முதலமைச்சர் கலைஞர் இரங்கல்.**
**8–11–2008**

திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியின் ம.தி.மு.க. உறுப்பினர் வீர. இளவரசன் மாரடைப்பு காரணமாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் இன்றையதினம் இயற்கை எய்தினார் என்ற செய்தியினை அறிந்து மிகவும் வருந்துகிறேன். குறைந்த வயதில் அவர் மறைந்து விடுவார் என்று யாருமே எதிர்பார்க்காத நிலையில் இயற்கை அவரை நம்மிடமிருந்து பிரித்து விட்டது. சட்டமன்றத்தில் அவர் சார்ந்திருந்த கட்சியின் சார்பில் வாதாடு கின்ற நேரத்திலும் கண்ணியம் சிறிது கூட கெடாத நிலையில் பல முறை அவர் பேசியதை நான் கேட்டிருக்கிறேன். வரும் 10ஆம் தேதியன்று சட்டமன்றம் கூடுகின்ற நிலையில் இத்தகையதோர் செய்தி உள்ளம் உருக்குகின்ற ஒன்றாகும். அவரை இழந்து வாடும் அவரது துணைவியாருக்கும், குழந்தைச் செல்வங்களுக்கும், உறவினர்களுக்கும், அவரது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9